1996 ஆகஸ்ட் 10] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

கோடி மதிப்பீட்டில், கூடிய விரைவில்--சென்ற அரசைப் போல் இல்லாமல்-- இந்த அரசு அந்த வேலைகளை நிச்சயமாக நிறைவேற்றும்.

முற்பகல் *11-00*

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், வீடுகள் கட்டித்தரப்படுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முன்னுரிமை அளித்து, நடப்பாண்டில் வீடுகள் கட்டித்தரப்படும். கடல் எல்லையைவிட்டு 200 மீட்டர் தள்ளியே வீடுகள் கட்டித்தரப்படும். காரணம் என்னவென்றால், அடிக்கடி கடல் அரிப்பின் காரணமாக அந்த வீடுகள் சேதம் அடைகின்றன. ஆகவே, 200 மீட்டர் தள்ளியே அந்த வீடுகள் கட்டித் தரப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற அரசைப்போல் இல்லாமல், மீனவர்கள் மேல் அதிக பற்று கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவர்களுக்கு ஏற்படும் சம்பவங்கள் குறித்தும், அவர்களுக்கு அளிக்கவேண்டிய நிவாரணங்கள் குறித்தும் அடிக்கடி தொடர்பு கொண்டு, கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ரூ.43.50 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது நிச்சயமாக, அவர்களுடைய உடனடி நிவாரணத்திற்கே தவிர, அவர்களுக்கு அளிக்கப்படும் நிரந்தர நிவாரணத்திற்கு அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

தொகுப்பு வீடுகள் கட்ட ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதியுதவியை உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து சிறப்புக் கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். காந்தி, திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர். சொக்கர் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

[*1996 ஆகஸ்ட் 10*

***திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு, ஜே.வி.வி.டி. திட்டத்தில் கொடுக்கப்படும் தொகையான ரூ.21,-000 மிகவும் குறைவாக இருக்கின்றது. அந்தப் பணம் போதாது என்றும், அதிகம் கொடுக்குமாறும், நான் மட்டும் அல்ல, வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், திரு. சொக்கர் அவர்களும், மற்றும் சில உறுப்பினர்களும் கேட்டிருந்தோம். ஆனால், மானியக் கோரிக்கையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 'ஃபிங்கர் டிப்ஸ்'ஸில் ஒரு சிலவற்றிற்குப் பதில் சொல்லி விட்டு, அதிகமான திட்டங்களை அறிவித்துவிட்டு, எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறார். ஆனால் இந்தத் தொகுப்பு வீடுகளைப் பற்றி மறந்துவிட்டாரோ, என்னவோ தெரியவில்லை. இது மிகவும் அவசியமானதொன்று என்பதால், உடனடியாக இந்தத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அதிகமாக தொகையை ஒதுக்கி, தரமான வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இதனை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மானியக் கோரிக்கையின் மீது பேசிய பல உறுப்பினர்களும் இதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒரு உறுப்பினர் *30,000* ரூபாய் தேவைப்படும் என்று குறிப்பிட்டார். மற்றொரு உறுப்பினர் *32,000* ரூபாய் தேவைப்படும் என்று குறிப்பிட்டார். சிலர், *25,000* ரூபாய் தேவைப்படும் என்று குறிப்பிட்டார்கள். எப்படியோ, இதை உயர்த்த வேண்டுமென்ற கருத்து பலரிடத்திலும் இருக்கின்றது; என்னிடத்திலும் இருக்கின்றது. இதையொட்டி நான், நேற்றையதினம் அறிவிக்கவில்லையென்றாலும், இன்றையதினம் இந்த அவையில் அறிவிக்கிறேன். அந்தத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ரூ.27,000 ஆக உயர்த்தி அளிக்கப்படும். வீடுகளைக் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் இல்லாவிட்டாலும், பயனாளிகளே அதைக் கட்டவேண்டுமென்கிறபோது, முன்பிருந்த தொகை குறுகிய தொகையாகத்தான் இருக்கிறதென்று பல கருத்துக்கள் வந்த காரணத்தையொட்டி, இந்த அறிவிப்பை நான் வெளியிடுகிறேன்.